13 NOV 2020
தஞ்சாவூர்

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – திருச்சி கோட்டம் – திரு கு.பாபு என்பவர் கருணையடிப்படையில் 20.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (ப) எண். 175

நாள்: 14.10.2020
சார்வரி, புரட்டாசி–28,
திருவள்ளுவர் ஆண்டு, 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. இணை ஆணையர் (வணிகவரி), திருச்சி கோட்டம் அவர்களின் செயல்முறைகள் எண்.14490/2017/ஆ2, நாள் 06.12.2018.
3. கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலக கடித எண்.ஒய்3/36351/2019, நாள் 16.06.2020.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ–1) துறை, நாள் 23.01.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், திருச்சி கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), தஞ்சாவூர் அலுவலகத்தில், அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த போது திரு வி.குமார் என்பவர் 18.01.2015 அன்று மரணமடைந்ததால் அவரது மனைவி திருமதி கு.ரேவதி என்பவர் தனது மகன் திரு கு.பாபு என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 29.12.2015 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு கு.பாபு, இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட திருச்சி கோட்டம் இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் திருச்சி கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), தஞ்சாவூர்–2 வரிவிதிப்பு வட்ட அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 20.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு கு.பாபு என்பவர் அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 20.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. கூடுதல் ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு கு.பாபு, கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை

தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில் பார்வை 4-ல் உள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே, கூடுதல் ஆணையரின் பரிந்துரையை ஏற்று, வணிகவரித் துறையில் திருச்சி கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), தஞ்சாவூர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப், பணிபுரிந்த போது 18.01.2015 அன்று பணியிடை மரணமடைந்த திரு வி.குமார் என்பவரது மகன் திரு கு.பாபு என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வணிகவரித் துறையில், உதவி ஆணையர் (வணிகவரி), தஞ்சாவூர்-2 வரிவிதிப்பு வட்ட அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 20.12.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின், அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.14616/ ட்டி-1/2020, நாள் 05.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.25191/ஜ/1/2020-1, நாள் 08.10.2020 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

திரு கு.பாபு, இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் (வணிகவரி), தஞ்சாவூர்-2 வரிவிதிப்பு வட்ட அலுவலகம்,
திருச்சி கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (வணிகவரி), திருச்சி கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி-1) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/10/20

பிரிவு அலுவலர்